## மத்திய சுற்றாடல் அதிகாரசபை – 2017

மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றல் கூற்று, உரிமை சொத்துக்களில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கத் தகவல்களின் பொழிப்பினை உள்ளடக்கிய 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1988 இன் 56 ஆம் இலக்க தேசிய சுற்றாடல்சார் சட்டத்தினால் திருத்தப்பட்ட 1980 இன் 47 ஆம் இலக்க தேசிய சுற்றாடல்சார் சட்டத்தின் 6(3) பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. நிதி அதிகாரச் சட்டத்தின் 14(2)(சீ) ஆம் பிரிவின் பிரகாரம் அதிகார சபையின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன. நிதி அதிகாரச் சட்டத்தின் 13(7)(ஏ) ஆம் பிரிவின் பிரகாரம் விரிவான அறிக்கையொன்று அதிகார சபையின் தலைவருக்கு 2018 ஜுலை 31 ஆந் திகதி வழங்கப்பட்டது.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ISSAI 1000-1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந் நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக் கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் அதிகாரசபையின் நிதிக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி அதிகாரசபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் விளைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் மற்றும் (4) ஆம் உப பிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.4 முனைப்பழிப்புள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

## 2.1 முனைப்பழிப்புள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்கள் நிதிக்கூற்றுக்களில் ஏற்படுத்தும் தாக்கங்களைத் தவிர, நிதிக்கூற்றுக்களானவை மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப் பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.2.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

#### (அ) இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்கள் 01

நியமத்தின் 88 ஆம் பந்தியின் பிரகாரம் அருவச் சொத்துக்கள் வரிசை விடயம் ஒன்றாக நிதி நிலைமைக் கூற்றின் முன்பகுதியில் உட்படுத்தப்பட வேண்டுமெனினும், அதிகார சபைக்குச் சொந்தமான ரூபா 819,322 பெறுமதியான மென்பொருட்கள் என்பவற்றை தனியாக இனங்காணாமல் ஆதனங்கள், பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணக் கிரயத்தின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

#### (ஆ) இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்கள் 02

(i) மத்திய சுற்றாடல் அதிகார சபையின் காசுப்பாய்ச்சல் கூற்று தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

- நிதி செயலாற்றல் கூற்றில் காட்டப்பட்டுள்ள ரூபா 5,507,674 நிதி அல்லாத ஏனைய செயற்பாட்டு செலவுகள் தொழிற்படு, செயற்பாட்டு தொழிற்பாடுகளின் கீழ் வரிக்கு முன்னரான இலாபத்துடன் சீராக்கல் செய்யப்பட்டிருந்தது.

- 2016 ஆண்டின் போது கொள்வனவு செய்திருந்த ரூபா 6,491,054 இற்கான ஆதனங்கள், பொறித்தொகுதிகள் மற்றும் உபகரண பெறுமதியினை முதலீட்டு செயற்பாடுகளின் கீழ் காசு வெளிப்பாய்ச்சல் என மற்றும் மீளாய்வாண்டிற்காக மூலதன மானியங்களின் கீழ் வரிப் பொறுப்பு இலாபத்திற்கு காசு உள்பாய்ச்சல் என காட்டப்பட்டிருந்தது.

- நடைமுறை வேலையின் கீழ் அடங்கியுள்ள ரூபா 42,665,352 இற்கான பணம் அல்லாத கொடுக்கல் வாங்கல்களை முதலீட்டு செயற்பாடுகளின் கீழ் காசு வெளிப்பாய்ச்சல் என காட்டப்பட்டிருந்தது.

- திண்மக் கழிவுப் பொருள் அகற்றும் வசதிகளை நிர்மாணிக்கும் செயற்திட்டத்தின் மீளாய்வாண்டிற்கான பணிக்கொடை ஒதுக்கம் ரூபா 387,785 தொகை அச் செயற்திட்டத்திற்கு உரிய காசுப்பாய்ச்சல் கூற்றில் செயற்பாட்டு தொழிற்பாடுகளின் கீழ் வரிக்கு முன்னரான இலாபத்தில் இருந்து குறைந்துக் காட்டப்பட்டிருந்தது.

**(இ) இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 07**

(i) நியமத்தின் 65 ஆம் பந்தியின் பிரகாரம் சொத்தொன்றின் பயன்தறு வாழ்க்கை காலத்தை குறைந்தளவு அனைத்து வருடாந்த அறிக்கையிடும் காலப்பகுதியில் இறுதித் திகதியில் மீளாய்வு செய்யப்பட வேண்டுமெனினும், அவ்வாறு செய்யப்படாமல் தொம்பே தேகாரோக்கிய குப்பை தேக்கத்தில் பயன்தறு வாழ்க்கைக்காலம் 20 ஆண்டுகளுக்கு பதிலாக எதுவித அடிப்படையும் இன்றி 40 வருடங்கள் என மதிப்பிடப்பட்டுள்ளது.

(ii) இயந்திரங்கள் மற்றும் பொறித்தொகுதிகளுக்கு மீளாய்வாண்டின் போது ரூபா 213,403 இற்கான பெறுமானத்தேய்வு ஒதுக்குதல் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் நியமத்தின் 86 பந்தியின் பிரகாரம் அதற்கான பெறுமானத்தேய்வு விகிதாசாரம் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தியிருக்கவில்லை.

**(ஈ) இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 09**

நியமத்தின் 47(அ) பந்தியின் பிரகாரம் அதிகார சபையினால் இருப்பு கணிப்பு கிரய சூத்திரத்தை நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தியிருக்கவில்லை.

### 2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

### 2.2.2.1 மத்திய சுற்றாடல் அதிகாரசபை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) முன்னைய ஆண்டிற்கான செலவுகள் என காட்டப்பட்டிருந்த ரூபா 6,491,054 தொகைக்கான ஆய்வுகூட உபகரணங்கள் மீளாய்வாண்டின் போது மூலதனப்படுத்தியிருந்த போதிலும், அப் பெறுமதியினை தடுத்து வைதத உழைப்புகளுக்கு செலவு வைக்கப்படுவதற்கு பதிலாக மீளாய்வாண்டிற்கான செலவுகளில் இருந்து கழித்து காட்டியிருந்ததுடன் அதற்குரிய பெறுமானத்தேய்வு ரூபா 30,232 தொகை மீளாய்வாண்டிற்கான பெறுமானத்தேய்வுகள் என காட்டப்பட்டிருந்தன.

(ஆ) மீளாய்வாண்டிற்கான மோட்டார் வாகனப் பெறுமானத்தேய்வு ரூபா 391,249 இனால் மிகையாகவும் மற்றும் ஏனைய ஆதனங்கள், பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணங்களின் பெறுமானத்தேய்வு ரூபா 494,016 இனால் குறைவாகக் காட்டப்பட்டிருந்தது.

(இ) கழிவுப்பொருட்களை அகற்றுதல் தொடர்பாக பெறவேண்டிய வருமானம் ரூபா 3,850,714 தொகையினை கணக்கீடு செய்திருக்கவில்லை.

(ஈ) 2015 மற்றும் 2016 ஆண்டுகளின் போது பயன்பாட்டிலிருந்து அகற்றப்பட்டிருந்த வாகனங்களின் விற்பனை மூலம் கிடைத்திருந்த ரூபா 2,544,324 தொகை மீளாய்வாண்டின் போது திரண்ட நிதியத்திற்கு செலவு செய்திருந்ததுடன் அதனை தடுத்து வைத்த இலாபத்துடன் சீராக்கல் மேற்கொள்வதற்கு பதிலாக ஆண்டிற்கான செலவுகள் என காட்டப்பட்டிருந்தது.

(உ) சுற்றாடல் தாக்கத்தினை மதிப்பாய்வு செய்வதற்கான அனுமதிப்பத்திரங்கள் வழங்கியதன் மூலம் கிடைத்திருந்த பணத்தில் இருந்து பரிசோதனை அலுவல்கள் பூர்த்தி செய்திருந்த 03 வருடங்களை விட பழமையான ரூபா 49.33 மில்லியன் இற்கான மீதியொன்று வருமானம் என கணக்கீடு செய்வதற்கு பதிலாக நடைமுறை பொறுப்புக்களின் கீழ் காட்டப்பட்டிருந்தது.

(ஊ) முன்னைய ஆண்டிற்கான அட்டுறுச் செலவுகளுக்காக மிகை ஒதுக்கம் ரூபா 291,571 தொகை தடுத்து வைக்கப்பட்ட உழைப்புக்களுக்கு சீராக்கல் செய்வதற்கு பதிலாக மீளாய்வாண்டிற்கான செலவுகளில் குறைத்துக் காட்டப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டிற்கான ரூபா 338,364 தொகையான அட்டுறு செலவுகளை கணக்கீடு செய்திருக்கவில்லை.

(எ) கூட்டுத்தொகை ரூபா 14,947,726 இற்கான மீண்டுவரும் செலவுகள் நடைபெறுவேலைகள் என காட்டப்பட்டிருந்தது.

**2.2.2.2 பிலிஸரு செயற்திட்டம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 07 ஒப்பந்த வேலைகள் தொடர்பாக மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நிதிக்கூற்றுக்களில் ரூபா 3,164,347 இற்கான வேலை ஆரம்பிப்பதற்கான முற்பண மீதியொன்று காட்டப்பட்டிருந்த போதிலும், இறுதி சிட்டைகளில் இருந்து கழித்திருந்த ரூபா 416,310 தொகை அந்த கணக்கில் இருந்து செயற்பாட்டு செலவுகளுக்கு மாற்றப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு செலுத்த வேண்டியிருந்த தடுத்து வைத்தல் பணம் ரூபா 976,164 இனால் மிகையாகக் காட்டப்பட்டிருந்தது.

(இ) மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு செலுத்த வேண்டியிருந்த ஒப்பந்த வேலை சிட்டைகளின் பெறுமதி ரூபா 19,942,995 தொகை குறைவாகக் காட்டப்பட்டிருந்தன.

(ஈ) பண்டங்கள் கொள்வனவின் போது தாமதக் கட்டணமாக அறவிடப்பட்ட (liquidation damages) ரூபா 902,596 தொகை வருமானம் என கணக்கீடு செய்யப்பட வேண்டுமெனினும், நிதிக் கூற்றுக்ளில் நடைமுறைப் பொறுப்பு ஒன்றென காட்டப்பட்டிருந்தது.

(உ) முன்னைய ஆண்டிற்கான அட்டுறுச் செலவுகள் மிகை ஒதுக்கம் ரூபா 568,946 தொகை தடுத்து வைக்கப்பட்ட உழைப்புக்களுக்கு சீராக்கல் செய்வதற்குப் பதிலாக மீளாய்வாண்டிறகான செலவுகளில் இருந்து கழித்து காட்டப்பட்டிருந்தது.

(ஊ) மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பிலிஸரு செயற்திட்டத்தின் அட்டுறு செலவுகளின் கூட்டுத்தொகை ரூபா 1,630,847 தொகைக்கான வரவு மீதி காட்டப்பட்டிருந்த போதிலும் இந்த மீதியை இனங்கண்டு தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

**2.2.2.3 திண்மக் கழிவுப் பொருள் அகற்றுவதற்கான வசதிகளை நிர்மாணிக்கும் செயற்திட்டம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) செயற்திட்டத்திற்கான முன்னைய ஆண்டின் சீராக்கல்களின் பெறுமதி ரூபா 45,947 தொகை தடுத்து வைக்கப்பட்ட உழைப்புக்களுக்கு சீராக்கல் மேற்கொள்வதற்கு பதிலாக மீளாய்வாண்டிற்கான செலவுகளுக்கு சீராக்கல் செய்யப்பட்டிருந்தது.

(ஆ) 2017 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நடைமுறை சொத்துக்களின் கீழ் வைப்புக்கள் எனக் காட்டப்பட வேண்டிய ரூபா 2,884,421 தொகை காசும் காசுக்கு சமமானவைகளின் கீழ் காட்டப்பட்டிருந்தது.

**2.2.3 கணக்காய்வின் சான்றுகள் இன்மை**

உள்ளூராட்சி நிறுவனங்கள் மற்றும் ஏனைய நிறுவனங்களின் சேதனப் பசளை செயற்களம் நிர்மாணித்தல் தொடர்பான செயற்திட்டங்கள் தொடர்பாக 2017 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு அட்டுறு செலவுகள் எனக் காட்டப்பட்டிருந்த ரூபா 223,665,869 தொகை தொடர்பாக சிட்டைகள் கணக்காய்விற்கு சமர்ப்பித்திருக்கவில்லை.

**2.3 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2016 ஆண்டு முதல் காணப்படும் செலுத்த வேண்டிய 8 சுற்றாடல் சார் தாக்கங்களை மதிப்பீடு செய்தலுக்கான 08 முற்பண மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 61,524 தொகை மீளாய்வாண்டின் போதும் தீர்த்திருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு 6 உத்தியோகத்தர்களிடம் பல வருட காலமாக அறவிடப்படாமல் காணப்பட்ட ரூபா 1,083,076 தொகைக்கான இடர்கடன் மீதிகளை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(இ) முன்னைய ஆண்டின் போது அட்டுறு செலவுகள் எனக் காட்டப்பட்டிருந்த 06 செலவு விடயங்களின் கூட்டுத்தொகை ரூபா 2,282,518 தொகை மீளாய்வாண்டு இறுதி அளவிலும் தீர்த்திருக்கவில்லை.

**2.4 சட்டங்கள் விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணக்கமின்மைகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங் களுடன் தொடர்பு | இணக்கமின்மைகள் |
| --- | --- |
| (அ) 2006 இன் 12 ஆம் இலக்க முத்திரைக் கட்டண விஷேட ஏற்பாட்டுச் சட்டம் | ஒவ்வொரு காலாண்டு இறுதியிலும் முத்திரை வரி என அறவிடப்பட்டிருந்த பணம் தொடர்ந்து வரும் மாதத்திலும் 15 ஆம் திகதிக்கு முன்னர் உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்திற்கு அனுப்பப்பட வேண்டுமெனினும் அதிகார சபையினால் முன்னைய ஆண்டின் மற்றும் மீளாய்வாண்டின் போது சேகரிக்கப்பட்ட முத்திரை வரி ரூபா 3,561,268 தொகையினை அனுப்பியிருக்கவில்லை. |

(ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபனக் கோவை

| | |
|---|---|
| XXIX ஆம் அத்தியாயத்தின் பிரிவு 2.1 | முதல் நியமனம் பெறும் உத்தியோகத்தர் தமது சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான கூற்று சமர்ப்பிக்க வேண்டுமெனினும், அதன் பிரகாரம் செயற்பட் டிருக்கவில்லை. |

(இ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியசரின் நிதிப் பிரமாணக் கோவை

| | |
|---|---|
| (i) நிதிப் பிரமாணம் 454 மற்றும் 751 | அனைத்து பெறுவனவுகள் மற்றும் கொடுப்பனவுகள் பொருட் பதிவேட்டில் பதியப்பட்டு உரிய முறையில் கணக்கீடு செய்ய வேண்டுமெனினும் காட்டப்பட்டிருந்த போதிலும் பிலிசரு செயற்திட்டத்தில் இருப்புப் பதிவேடு அதன் பிரகாரம் பேணப்பட்டு நாளது வரை ஆக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) நிதிப்பிரமாணம் 757(2) | மீளாய்வாண்டிற்கான பண்டக் கணிப்பீட்டு அறிக்கையின் பிரகாரம் 08 விடயங்களில் 24 மிகைகளும் 11 விடயங்களில் 132 பற்றாக்குறைகளும் இனங்கண்டிருந்த போதிலும், நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் இது தொடர்பாக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |

(ஈ) சுற்றறிக்கைகள்

| | |
|---|---|
| (i) 1971 ஜூலை 26 ஆம் திகதிய 810 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கை | சம்பளமற்ற விடுமுறைகளுக்காக அறவீடு செய்தல் அந்த விடுமுறை பெற்ற மாதத்திலேயே அல்லது தொடர்ந்து வரும் மாதத்தில் சம்பளத்திலிருந்து முற்றாக அறவிடப்படட வேண்டுமெனினும் அவ்வாறு அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |
| (ii) 1994 ஜனவரி 21 திகதிய 328 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கை | உடன்படிக்கை ஒன்று மேற்கொள்ளப்படாமல் 24 எரிபொருள் நிரப்பு நிலையங்களில் ரூபா 1,155,500 இற்கான முற்பணங்கள் வைப்புச் செய்யப்பட்டிருந்தது. |
| (iii) 2002 நவம்பர் 28 ஆம் திகதிய IAI/2002/02 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கை | பிலிசரு செயற்திட்டத்தினால் கணினிகள் மற்றும் மென்பொருட்கள் தொடர்பாக நிலையான சொத்துக்கள் பதிவேடு ஒன்று பேணியிருக்கவில்லை. |
| (iv) 2015 ஜூலை 14 ஆம் திகதிய 03/2015 ஆம் இலக்க பொது நிதி சுற்றறிக்கை | (i) அனுராதபுரம் மற்றும் கண்டி மாவட்ட அலுவலகங்களில் வழங்கியிருந்த ரூபா 15,000 இற்கான சிறு காசு முற்பணம் கடந்த ஆண்டினை போலவே மீளாய்வாண்டின் போதும் திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு தீர்த்தல் மேற்கொண்டிருக்கவில்லை. |

(ii) துணை கட்டுநிதியொன்று அது வழங்கப்படட்ட கருமம் முடிவடைந்தவுடன் தீர்க்கப்பட வேண்டுமெனினும் மீளாய்வாண்டின் போது இரண்டு சந்தர்ப்பங்களில் செலுத்தப்பட்ட ரூபா 24,300 தொகையான முற்பணம் முற்றாக தீர்த்திருக்காததுடன் 06 சந்தர்ப்பங்ளில் செலுத்தியிருந்த ரூபா 88,500 தொகைக்கான கட்டுநிதியினை தீர்ப்பதற்காக 36 நாட்கள் முதல் 69 நாட்கள் வரை தாமதமாகியிருந்தது. மேலும், தேவையினை மிகைத்து 57 சந்தர்ப்பங்களில் ரூபா 1,762,465 இற்கான முற்பணம் வழங்கப்பட்டிருந்தது.

## 2.5 போதிய அதிகாரத்தினால் உறுதிப்படுத்தப்படாத கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பயன்படுத்திய பின்னரான பிளாஸ்டிக் பொருட்கள் முகாமைத்துவ செயற்திட்டம் தொடர்பாக பணிக்கொடைக் கொடுப்பனவு அந்த செயற்திட்டத்தின் நிதி ஏற்பாடுகளில் இருந்து செலுத்துவதற்கு அங்கீகாரம் கிடைத்திருந்த போதிலும் ரூபா 679,800 இற்கான பணிக்கொடை பிலிஸரு செயற்திட்டத்தினால் செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) உத்தியோகத்தர் வருடாந்த சேமித்திருந்த மருத்துவ விடுமுறைகளுக்கான கொடுப்பனவு ரூபா 21,006,163 தொகை செலுத்தியிருந்த போதிலும் 2003 ஜூன் 02 ஆம் திகதிய பீஈடீ/12 இலக்கங் கொண்ட பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் பந்தி 9.12 இன் பிரகாரம் திறைசேரியின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளாமல் உத்தியோகத்தர்களிடம் பங்களிப்பு தொகை அறவீடு செய்யாமல் சத்திர சிகிச்சை மற்றும் வைத்தியசாலைக் கட்டண காப்புறுதி ஒன்றிற்காக ரூபா 10,796,255 தொகை அதிகார சபையின் நிதியத்தில் இருந்து செலுத்தப்பட்டிருந்தது.

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2017 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது அதிகார சபையின் மற்றும் அதனோடு தொடர்புடைய இரண்டு செயற்திட்டங்களில் பற்றாக்குறை ரூபா 58,942,000 தொகையாகக் காணப்பட்டதுடன் அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மிகை ரூபா 45,142,000 தொகையாக காணப்பட்டமையால் முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 104,084,000 இற்கான வீழ்ச்சி ஒன்று ஏற்பட்டிருந்தது. சிறிய அளவிலான சேதனப் பசளை செயற்தளங்கள் நிர்மாணிக்கும் நிகழ்ச்சித் திட்ட செலவுகள் ரூபா 133,733,000 அனால் மற்றும் சுங்கத் தீர்வை மற்றும் ஏனைய செலவுகள் ரூபா 15,784,000 இனால் அதிகரித்தல் மேற்கூறிய நிதி விளைவுகளின் வீழ்ச்சிக்கு முக்கிய காரணமாகியுள்ளது.

மீளாய்வாண்டினதும் முன்னைய 04 ஆண்டுகளினதும் நிதி விளைவுகளை பகுப்பாய்வு செய்த போது 2013 ஆண்டில் ரூபா 28,610,438 தொகையான பற்றாக்குறை 2015 ஆண்டு இறுதியில் உள்ளவாறு ரூபா 72,318,000 இற்கான பற்றாக்குறை ஒன்று வரை இடையறாது வளர்ச்சியடைந்திருந்த போதிலும் 2016 ஆண்டின் போது ரூபா 45,142,000 இற்கான மிகையொன்று ஏற்பட்டிருந்தது. எவ்வாறாயினும், நிதி விளைவுகளுக்கு ஊழியர் ஊதியம் மற்றும் நடைமுறையல்லாத சொத்துக்களுக்கான பெறுமானத்தேய்வு மீண்டும் சீராக்கல் செய்த பின்னர் 2013 ஆண்டின் போது ரூபா 369,820,312 இற்கான பங்களிப்பு 2016 ஆண்டு

இறுதியளவில் ரூபா 743,306,000 தொகை வரை இடையறாமல் வளர்ச்சியடைந்திருந்த போதிலும் மீளாய்வாண்டின் போது ரூபா 669,680,000 தொகை வரை வீழ்ச்சி அடைந்திருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

---

### 4.1 செயலாற்றுகை

---

#### 4.1.1 செயல் ஆற்றுகை மற்றும் மீளாய்வு

---

1988 இன் 56 ஆம் இலக்க தேசிய சுற்றாடல்சார் சட்டத்தின் மூலம் திருத்தப்பட்ட 1980 இன் 47 ஆம் இலக்கங் கொண்ட தேசிய சுற்றாடல்சார் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் காட்டப்பட்டிருந்த 18 பிரதான குறிக்கோள்களில் கீழ்வரும் குறிக்கோள்களை நிறைவேற்றுதல் குறைந்த மட்டத்தில் காணப்பட்டதுடன் அது தொடர்பாக கூடுதலான கவனம் செலுத்தியிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது.

(அ) திண்மக் கழிவுப் பொருள் முகாமைத்துவம் தொடர்பாக மிகையான பொறுப்பு ஒன்று அதிகார சபைச் சாட்டப்பட்டிருந்ததுடன் பிலிஸரு செயற்திட்டத்தின் மூலம் சேதனப் பசளை செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்டிருந்த போதிலும் தேசிய சிக்கல் ஒன்றாகக் காணப்படும் கழிவுப்பொருள் முகாமைத்துவத்தை முறைப்படுத்தி சுற்றாடலுக்கு மற்றும் பொது மக்களுக்கு சுற்றாடல் மற்றும் சுகாதாரம் சார் பிரதிகூலமான நிலைமையை குறைப்பது தொடர்பாக கவனம் செலுத்துதல் குறைந்த மட்டத்தில் காணப்பட்டது.

(ஆ) உள்ளூராட்சி நிறுவனமொன்றில் கட்டுப்பாட்டு எல்லையில் சுற்றாடல் பாதுகாப்பு தொடர்பான ஏதேனும் விதப்புரைகள் மற்றும் குப்பை கழிவுப்பொருள், குப்பைகள் மற்றும் மலத்தை அங்கீகாரம் இன்றி குவித்தல் வெளிப்படுத்துதல் வைப்புச் செய்தல்தலை தடை செய்தல் மண் ஒடைவழியாக மற்றும் நீர் பாதைகளை நோக்கி தயார்படுத்துதல் மலம் அல்லது உப தொழிற்சாலை நீர்வெளியேறாத அல்லது நச்சு இரசாயனப் பொருட்கள் வெளிப்படுத்துதலை தடுத்தல் ஆகிய பகுதிகள் தொடர்பான சில விதப்புரைகளின் பிரகாரம் செயற்படுமாறு ஒவ்வொரு உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு விதித்தல் 1988 இன் 56 ஆம் இலக்க தேசிய சுற்றாடல்சார் சட்டத்தின் பிரகாரம் அதிகார சபைக்கு உரிய அதிகாரம் எனினும் அது தொடர்பாக கூடிய கவனம் செலுத்தியிருக்கவில்லை.

(இ) தேசிய பிரச்சினை ஒன்றாக காணப்படும் நகரை அண்மித்த பிரதேசங்களில் சேகரமாகும் குப்பைகள் தொடர்பாக நாட்டில் சிறு மற்றும் மத்திய அளவிலான குப்பை முகாமைத்துவ செயற்திட்டங்களை செயற்படுத்துவதற்குத் தேவையான விடயங்கள் வழங்குவதில் கவனம் செலுத்துதல், கழிவுப் பொருட்கள் முகாமைத்துவத்தின் மூலம் கிடைக்கக் கூடிய துணைப் பயன் ஒன்றாக சேதனப் பசளை உற்பத்தியின் மூலம் இரசாயன உரம் பயன்படுத்துவதற்கு மாற்றுத் தீர்வு பெற்றுக்கொடுத்தல் மற்றும் சுற்றாடல் சேதங்கள் குறைத்தல் போலவே அதிகார சபைக்கு வருமானம் ஒன்றினை பெற்றுக்கொள்ளல் ஆகிய விடயங்கள் தொடர்பாக முக்கியத்துவமொன்று காட்டுதல் அதிகார சபையின் உரிய பொறுப்பு ஒன்று ஆயினும் அதற்காக கூடிய கவனமொன்று செலுத்தியிருக்கவில்லை.

(ஈ) தேசிய சுற்றாடல்சார் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள குறிக்கோள்கள் மற்றும் முக்கிய கருமங்களிடையே சுற்றாடலை நோக்கி கழிவுப் பொருட்கள் மற்றும் கெட்ட பொருட்களை வெளிப்படுத்துவதற்கு மற்றும் சுற்றாடலின் நிலைமையை பாதுகாப்பது முன்னேற்றுவதற்கும் தேவையான அனைத்து முறைப்படுத்தும் அலுவல்களை ஒருங்கிணைத்தல் அதிகார சபைக்குரிய பொறுப்பு ஒன்றாக காணப்பட்ட போதிலும் அனேகமான உள்ளூராட்சி நிறுவனங்களினால் நகருக்கு அண்மையில் சேகரமாகும் குப்பை கழிவுப்பொருட்கள் அகற்றுதல் சுற்றாடலுக்கு போலவே பொதுமக்களின்

சுகாதார பாதுகாப்பு தொடர்பாக பாரதூரமான சிக்கல் ஒன்றாக இருப்பதால் அதற்கு விரைவில் தீர்வுகளைப் பெற்றுக்கொடுக்கும் தேவை தொடர்பாக கவனம் செலுத்தப்படல் குறைந்த மட்டத்திலேயே காணப்பட்டது.

## 4.2 முகாமைத்துவச் செயற்பாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) அதிகார சபைக்கு சொந்தமான 18 பிரதேச அலுவலகங்கள் வாடகை அடிப்படையில் நடாத்தப்படுவதுடன் மீளாய்வாண்டின் போது ரூபா 13,967,560 தொகை வாடகையாகச் செலுத்தப்பட்டிருந்த போதிலும் நிரந்தர காணிகள் பெற்றுக்கொண்டு கட்டிடங்கள் நிர்மாணித்தல் தொடர்பாக முகாமைத்துவத்தின் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது.

(ஆ) அதிகார சபைக்கு சாட்டப்பட்டிருந்த தொம்பே தேகாரோக்கிய குப்பை தொட்டியில் ரூபா 2,225,291 இற்கான வருானத்தை அதிகார சபையின் கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டிருந்த போதிலும் அதற்கான செலவு ரூபா 3,232,431 தொகையினை அதிகாரச சபையினால் மேற்கொள்வதற்கு பதிலாக பிலிஸரு செயற்திட்டத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

## 4.3 நிதியத்தினை குறைவாகப் பயன்படுத்தல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) அதிகார சபையின் பிராந்திய அலுவலகங்களுக்காக அப் பகுதிகளிலுள்ள இலங்கை வங்கி கிளைகளில் பேணப்பட்டிருந்த 14 சேகரிப்பு கணக்குகள் மீளாய்வாண்டு பூராகவும் காணப்பட்ட ரூபா 70,935,172 இற்கான வங்கி மீதி தலைமை அலுவலகத்தின் நடைமுறை கணக்கிற்கு மாற்றமாமல் தடுத்து வைத்திருந்தது. அதன் பிரகாரம் சிறந்த நிதி முகாமைத்துவமொன்று காணப்பட்டமையால் அந் நிதியம் அதிகார சபைக்கு சொந்தமான செயற்பாட்டு விடயங்களை நிறைவேற்றிக் கொள்வதற்காக அல்லது முதலீடு செய்வதன் மூலம் வருமானத்தை உழைத்தல் தொடர்பாக கவனம் செலுத்தியிருக்கவில்லை.

(ஆ) ஒன்று திரட்டிய வளங்கள் முகாமைத்துவம் (IRM) செயற்திட்டத்திற்காக முன்னைய ஆண்டில் கிடைத்திருந்த ரூபா 1,288,713 இற்கான மூலதன மானியம் மீளாய்வாண்டு இறுதி அளவிலும் பயன்படுத்தியிருக்கவில்லை.

## 4.4 விளைவற்ற மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்படும் சொத்துக்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பெறுமதி மதிப்பீட்டு பெறுமதி ரூபா 800,000 தொகைக்கான வான் ஒன்று ஒரு வருட காலம் மற்றும் கடல் நீரினால் சேதமுற்ற காரணத்தினால் ஓட்ட நிலையிலிருந்து அகற்றியிருந்த வாகனம் ஒன்று 06 வருட காலமான அதிகார சபை வளவில் விளைவற்றுக் காணப்பட்ட போதிலும் அந்த வாகனத்தை அகற்றுவதற்கு அல்லது பழுதுபார்த்து பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஆ) ரூபா 1,552,490 தொகை கிரயத்தையுடைய மீள்சுழற்சி கழிவுப்பொருளை களஞ்சியப்படுத்தக் கூடிய 05 டென்ட்கள் ஒரு வருட காலம் அதிகார சபையின் மோட்டார் வாகனம் நிறுத்தி வைக்குமிடத்தில் பயன்படுத்தப்படாமல் காணப்பட்டது.

## 4.5 முறைசார் விதமாக உரித்தாக்கப்படாத காணிகள்/ ஆதனங்களில் செயற்திட்டம் ஆரம்பித்தல்

பிலிசரு செயற்திட்டத்திற்கு சட்ட ரீதியான உரிமையில்லாத காணி ஒன்றில் ரூபா 1,200,734 தொகை செலவிடப்பட்டு கட்டிடமொன்று நிர்மாணிக்கப்பட்டிருந்த போதிலும் காணியின் உரிமையினை சட்டரீதியாக உரித்தாக்குவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

## 5. நிலைபேறான அபிவிருத்தி

### 5.1 நிலைபேறான அபிவிருத்தி குறிக்கோள்களை நெருங்குதல்

2017 ஆகஸ்ட் 14 ஆம் திகதிய என்பீ/எஸ்பீ/எஸ்டீஜீ/17 இலக்கங் கொண்ட நிலைபேறான அபிவிருத்தி தொடர்பாக தேசிய கொள்கை மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சின் செயலாளரினால் வழங்கப்பட்டிருந்த கடிதம் மற்றும் ஐக்கிய நாடுகளின் ‘‘2030 ஆண்டு நிகழ்ச்சித் திட்டத்தின்’’ பிரகாரம் அனைத்து அரச நிறுவனங்களினாலும் செயற்பட வேண்டிக் காணப்பட்டதுடன் அதன் பிரகாரம் அதிகார சபை தனது நோக்கெல்லையின் கீழ் வரும் கருமங்கள் தொடர்பாக எவ்வாறு செயற்பட வேண்டுமென்பது தொடர்பாக அறிந்து நிலைபேறான அபிவிருத்தியின் குறிக்கோள்கள் மற்றும் இலக்குகள் இனங்கண்டிருந்தது. எனினும் அந்த இலக்குகளை நெருங்குவதற்காக தயாராகும் போது ஏனைய நிறுவனங்களுடன் சிறந்த தொடர்பாடல் இன்மையால் இலக்கான குறிக்கோள்களை நோக்கி நெருங்குவதற்காக திட்டங்கள் தயாரித்தல் மற்றும் முற் தயாராகும் செயற்பாடு மிகவும் மந்தபோக்கு நிலையில் மற்றும் பலவீன மட்டத்தில் காணப்பட்டது என அவதானிக்கப்பட்டது.

## 6. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 6.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2003 ஜுன் 02 ஆம் திகதிய பீஈடீ/12 இலக்கங் கொண்ட பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் பந்தி 6.5.1 இன் பிரகாரம், நிதியாண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் நிதிக்கூற்றுக்கள் கண்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட வேண்டுமெனினும் அதிகார சபை மற்றும் அதனை சேர்ந்த 02 செயற்திட்டங்கள் தொடர்பான மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டது 83 நாட்கள் தாமதத்துடன் அதாவது 2018 மே 22 திகதியாகும்.

### 6.2 பெறுகை மற்றும் ஒப்பந்தவேலை செயற்பாடுகள்

#### 6.2.1 பெறுகைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பெறுகை வழிகாட்டல் கோவையின் பிரிவு 8.9.1 இன் பிரகாரம் ரூபா 250,000 இனை மிகைக்கும் வேலைகளுக்காக ஒப்பந்த வேலைகள் மற்றும் ரூபா 500,000 தொகையினை மிகைக்கும் பண்டங்கள் அல்லது சேவைகள் ஒப்பந்த வேலைகளுக்காக உடன்படிக்கைகள் கையொப்பமிட்டிருக்கவில்லை.

(ஆ) பெறுகை வழிகாட்டல் கோவையின் 4.2.1 இன் பிரகாரம் பிரதான பெறுகை திட்டமொன்று தயாரித்திருக்கவில்லை.

(இ) 2017 ஆகஸ்ட் 31 திகதிய தொழில் நுட்ப மதிப்பாய்வு குழு அறிக்கையின் பிரகாரம், உற்பத்தியாளரின் சான்றிதழ் மற்றும் உற்பத்தியாளரின் உத்தரவாத சான்றிதழ் சமர்ப்பிக்கப்படாமையால் நிராகரிக்கப்பட வேண்டிய விலைகூறல் ஒன்று நிராகரிக்கப்படாமல் அந்த வழங்குனரிடம் ரூபா 8,028,200 தொகை பெறுமதியான அதிர்வுப் பகுப்பாய்வு உபகரணம் ஒன்று கொள்வளவு செய்திருந்தது.

(ஈ) பெறுகைகள் வழிகாட்டல் கோவையின் 5.4.4 இன் பிரகாரம், ஒப்பந்த வேலை தொகையில் சுமார் 20 சதவீதம் முற்பணமொன்றாக செலுத்தப்பட முடியும் எனினும் மீகஸ்வெவ திட்டமிட்ட தேகாரோக்கிய குப்பை தொட்டி செயற்திட்ட வளவில் ரூபா 5,546,557 இற்கான பாதுகாப்பு வேலி ஒன்று நிர்மாணிப்பதற்கான ஒப்பந்த வேலைக்காக வட மத்திய மாகாண பொறியியல் திணைக்களத்திற்கு 36 சதவீதம் அதாவது ரூபா 2,000,000 தொகை முற்பணம் என செலுத்தப்பட்டிருந்தது.

### 6.2.2 தாமதமாகிய செயற்திட்டங்கள்

மதிப்பிடப்பட்ட மொத்த கிரயம் 33,536,000 தொகை அமெரிக்க டொலர்களுக்கான பொருளாதார அபிவிருத்தி ஒத்துழைப்பு நிதியத்தின் கொரியாவின் கடன் உதவியின் கீழ் செயற்படும் திண்மக் கழிவுப்பொருள் அகற்றும் வசதிகளை நிர்மாணிக்கும் செயற்திட்டம் 2015 ஜூன் 29 திகதி பூர்த்தி செய்வதற்கு திட்டமிட்டிருந்த போதிலும், இவ் அறிக்கைத் திகதி வரை செயற்திட்டத்தில் திட்டமிடல் கட்டத்தின் அலுவல்கள் மாத்திரம் பூர்த்தி செய்திருந்ததுடன் செயற்திட்டத்தின் காலவரையறை 2021 வரை நீடிக்கப்பட்டிருந்தது. எனினும் உரிய கடன் மற்றும் வட்டி 10 வருட சலுகைக் காலத்தின் பின்னர் வருடாந்த வட்டி 0.15 சதவீதப்படி 40 வருடங்களில் செலுத்தி முடிக்க வேண்டியதுடன் இந்த செயற்திட்டத்தின் கருமங்களை ஆரம்பிப்பதில் நீண்ட கால தாமதம் காணப்பட்டமையால் பெற்றிருந்த கடனை தீர்ப்பதில் பாரிய அளவிலான நிதிசார் பிரதிகூலங்கள் ஏற்படுவதற்கு இடம் காணப்படுகின்றது என கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

### 6.3 வருடாந்த அறிக்கை சபையில் சமர்ப்பித்தல்

2003 ஜூன் 02 திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் பிரிவு 6.5.3 இன் பிரகாரம் நிதியாண்டு முடிவடைந்து 150 நாட்களுக்குள் வருடாந்த அறிக்கை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டுமெனினும் 2015 மற்றும் 2016 ஆண்டுகளுக்கான வருடாந்த அறிக்கைகள் 2018 ஜூலை அளவிலும் பாராளுமன்றத்தில் சமர்ப்பித்திருக்கவில்லை.

### 6.4 சமூகப் பொறுப்புக்களை நிறைவேற்றுதல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 114 பஸ் டிபோக்களில் 14 டிப்போக்கள் மாத்திரம் சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரம் பெற்றிருந்ததுடன் டிப்போவின் மூலம் கழிவுநீர் மற்றும் கழிவுப் பொருட்கள் வெளி சுற்றாடலுக்கு விடுவிப்பதன் காரணமாக, தாவரங்கள், மிருக மற்றும் மண்ணிற்கு கணிசமான அளவில் இழப்பு ஒன்று ஏற்படுவதினால் அது தொடர்பாக அதிகார சபை கவனம் செலுத்த வேண்டுமென அவதானிக்கப்பட்டது.

(ஆ) பொலிதீன், பிளாஸ்டிக் மீள்சுழற்சி தொடர்பாக பொது மக்களிடம் விளிப்புணர்வு ஒன்றினை ஏற்படுத்தவதைப் போலவே பொலிதீன் பிளாஸ்டிக் போன்ற உக்காத கழிவுப்பொருட்கள் முறைப் பிரகாரம் சுற்றாடலுக்கு கடத்திச்சென்று முகாமைத்துவம் செய்வதற்காக கூடிய பங்களிப்பு ஒன்றினை பெற்றுக்கொடுத்தல் அதிகார சபையின் பொறுப்பு ஒன்றாக காணப்பட்ட போதிலும் அவ் விடயத்தை செயற்படுத்திய பின் பயன்படுத்தாத பிளாஸ்டிக் கழிவுப் பொருட்கள் முகாமைத்துவ தேசிய செயற்திட்டம் இடைநிறுத்தப்பட்டமையால் எதிர்ப்பார்த்த குறிக்கோள்களை நெருங்குவதற்கு அதிகார சபைக்கு இயலாதிருந்தது என கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

## 7. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் அதிகார சபை தலைவரின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டது. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புகள் தொடர்பாக விஷேட கவனம் செலுத்தப்பட வேண்டும்.

| | முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பரப்பு | அவதானிப்புக்கள் |
|---|---|---|
| (அ) | கணக்கீடு | செலவுகள் உரிய விதத்தில் வகைப்படுத்தப்பட்டு கணக்கீடு செய்யாமை, பெறுமானத்தேய்வு உரிய விதத்தில் கணிக்காமை மற்றும் ஒப்பந்த வேலைகள் தொடர்பாக கணக்கீடு செய்தல் பிழையற்ற முறையில் மேற்கொள்ளப்படாமை. |
| (ஆ) | செயற்பாட்டு நிருவாகம் | சுற்றாடல்சார் சட்டத்தின் பிரகாரம் அதிகார சபைக்கு கிடைத்துள்ள அதிகாரங்களை செயற்படுத்தாமை, துணைக் கட்டுநிதிகள், முற்பணங்கள் மற்றும் பொருட் பதிவேடுகள் தொடர்பாக நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்காமை. |
| (இ) | மனித வள முகாமைத்துவம் | தனிப்பட்ட கோவைகள் நாளது வரை ஆக்கப்பட்டிருக் காமை, சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்று சமர்ப்பித்திருக்காமை, பிழையற்ற முறையில் சம்பள மட்டங்களில் வைத்தல் மற்றும் பதவியுயர்வு அங்கீகரிக்கப்பட்டுள்ள நடைமுறைப்படி நிறைவேற்றியிருக்காமை. |
| (ஈ) | செயற்திட்டங்களை செயற்ப டுத்தலும் கட்டுப்பாடு | உரிய திகதிய செயற்திட்டத்தை பூர்த்தி செய்வதற்கு தேவையான நடவடிக்கை எடுக்காமை. |
| (உ) | வாகனக் கட்டுப்பாடு | அகற்றப்பட வேண்டிய வாகனங்களை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்காமை. காப்புறுதி நட்டஈடு உரிய விதமாக பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்காமை, வாகன விபத்துக்கள் தொடர்பாக நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்காமை. |
| (ஊ) | சொத்துக்கள் நிருவாகம் | விளைவற்ற சொத்துக்களை மீண்டும் பயன்படுத்தக் கூடிய விதமாக தேவையான நடவடிக்கைகள் எடுத்தல் அல்லது அகற்றுவதற்கு நடவடிக்கை எடுத்திருக்காமை, வாகனங்களை பயன்படுத்தும் போது முறையான நடைமுறை ஒன்றினைகள் கடைபிடிக்காமை. |